இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 321 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆனி 16 – சனிக்கிழமை 01 ஜூலை 2023 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 321 : Thiruvalluvar Year - 2054 - Aani 16 - Saturday 01 July 2023 - Madurai 12 Pages ₹ 5.00




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.6.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் மாநிலம் முழுவதும் நடைபெற்ற 2022–2023ஆம் ஆண்டிற்கான திருக்குறள் முற்றோதல் போட்டியில் வெற்றி பெற்ற 124 மாணவர்களுக்கு பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கிடும் அடையாளமாக 9 மாணவ, மாணவியர்களுக்கு பரிசுத் தொகையாக தலா ரூ.15,000/–க்கான காசோலையும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கி, வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மருத்துவர் இரா.செல்வராஜ், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.6.2023) தலைமைச் செயலகத்தில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை சார்பில் மாவட்ட தீயணைப்பு அலுவலர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட திருமதி பா. இருசம்மாள் அவர்களுக்கும், தீயணைப்போர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 120 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 நபர்களுக்கும் பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் செ.சைலேந்திர பாபு, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் அபாஷ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திருக்குறள் முற்றோதல் போட்டியில்

# வெற்றி பெற்ற 124 மாணவ - மாணவியர்க்குப் பரிசு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, ஜூலை 1-**

**திருக்குறள் முற்றோதல் போட்டியில் வெற்றி பெற்ற 124 மாணவ, மாணவியர்களுக்கு தலா ரூ.15,000/ பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்அவர்கள்நேற்று(30.6.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் மாநிலம் முழுவதும் நடைபெற்ற 2022-2023ஆம் ஆண்டிற்கான திருக்குறள் முற்றோதல் போட்டியில் வெற்றி பெற்ற 124 மாணவர்களுக்கு பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கிடும் அடையாளமாக 9 மாணவ, மாணவியர்களுக்கு பரிசுத் தொகையாக தலா ரூ.15,000/க்கான காசோலையும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கி, வாழ்த்தினார்.

திருக்குறள் தமிழர்களின் தலையாய பெருநூலாகும். அதன் ஒன்றே முக்கால் வரிப்பாக்கள் அரிய, பெரிய, சிறந்த சிந்தனையை தூண்டும் எழிலோவியங்கள் ஆகும். கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப் பருளுங் களிப்பாய் காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணாய் - வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமாய் - மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியாய் நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவாய் எல்லார்க்கும் பொதுவில் நடமிடுகின்ற ஏற்ற மிகு திருக்குறளை இயற்றிய வான்புகழ் கொண்ட அய்யன் திருவள்ளுவருக்கு பெருமை சேர்க்கின்ற வகையில், தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பேருந்துகளிலெல்லாம் திருவள்ளுவரின் படத்துடன் திருக்குறளினைப் பொறித்து பொதுமக்களுக்கு திருக்குறளை அறிமுகம் செய்த மாட்சியும், அனைத்து அரசு அலுவலகங்களிலும் திருவள்ளுவரின் திருவுருவப் படத்தை நிறுவிய பெருமிதமும், குறளோவியம் தீட்டிய இலக்கியச் செறிவும், சென்னையில் வள்ளுவர் கோட்டம் அமைத்த சிறப்பும், அகிலம்போற்றும்அய்யன்திருவள்ளுவருக்கு 133 அடியில் குமரி முனையில் வானுயர் திருவள்ளுவர் சிலையையும் அமைத்த பாங்கும் திருக்குறளுக்கு நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர் வழங்கிய பதக்கங்களாகும்.

அவ்வண்ணமே, ஆண்டுதோறும் பொங்கல் விழா கொண்டாடப்படும் நாளுக்கு அடுத்த நாள் திருவள்ளுவர் திருநாள் என்று அறிவித்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மேலும் அணிசேர்த்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், 2000ஆம் ஆண்டு முதல் 1330 குறட்பாக்களையும் முற்றோதல் செய்யும் மாணவ, மாணவியர்களுக்கு குறள் பரிசு வழங்கும் திட்டம் தோற்றுவிக்கப்பட்டது. அதனடிப்படையில் ஆண்டுதோறும் பரிசுத் தொகையும் பாராட்டுச் சான்றிதழும் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக வழங்கப்பட்டு வருகிறது. இதுகாறும் 812 மாணவச் செல்வங்களுக்கு குறள் பரிசுத் தொகை வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

முத்தமிழறிஞர் கலைஞரின் அடியொற்றி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால், 20.01.2023 முதல் குறள் பரிசுத் தொகையை ரூபாய் 10,000/-த்திலிருந்து ரூபாய் 15,000/-ஆக உயர்த்தி வழங்கிட ஆணையிடப்பட்டது.

அந்த வகையில், 2022-2023ஆம் ஆண்டிற்கான திருக்குறள் முற்றோதல் போட்டியில் வெற்றி பெற்ற 124 மாணவர்களுள், சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த மாணவன் கா. நாகராஜன், மாணவி ரா. விசாலாட்சி, திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் செ.ஹேம்நாத், வெ. சந்தோஷ், மாணவிகள் சீ. நிவேதா, இர. காவ்யா, து. லோகிதா, செ.லக்ஷனா, காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவன் ஞா.ச.சந்தோஷ் ஆகிய ஒன்பது மாணவ, மாணவியர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பரிசுத் தொகை தலா ரூ.15,000/க்கான காசோலையும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கி, வாழ்த்தினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மருத்துவர் இரா. செல்வராஜ், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

## அமைச்சர் பதவியிலிருந்து

# செந்தில் பாலாஜியை நீக்கும் உத்தரவு ரத்து!

## கடும் எதிர்ப்புக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி அடிபணிந்தார்

*சென்னை, ஜூலை 1-*

*கடும் எதிர்ப்பு எதிரொலி காரணமாக அமைச்சர் செந்தில் பாலாஜியின் பதவி நீக்க உத்தரவை 5 மணி நேரத்தில் நிறுத்தி வைத்தார் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி.*

*தி.மு.க. தலைமையிலான தமிழ்நாடு அரசின் அமைச்சரவையில் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சராக இருந்தவர் செந்தில் பாலாஜி. அ.தி.மு.க. ஆட்சியில் போக்குவரத்து துறையில் வேலை வாங்கி தருவது தொடர்பாக செந்தில் பாலாஜி மீது குற்றச்சாட்டு எழுந்தது.*

*இந்த வழக்கு தொடர்பாக அமலாக்கத்துறை விசாரணை நடைபெற்று வந்தது. இதனிடையே, கடந்த மே 26ஆம் தேதி அமைச்சர் செந்தில் பாலாஜியின் சகோதரர் அசோக் வீட்டில் வருமானவரித் துறை சோதனை நடைபெற்றது. இந்த சோதனை கடந்த 2ஆம் தேதி நிறைவடைந்தது. இதனை தொடர்ந்து கடந்த 13ஆம் தேதி அமைச்சர் செந்தில் பாலாஜியின் வீடு உள்ளிட்ட சில இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர்.*

*சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள செந்தில் பாலாஜியின் அலுவலக அறையிலும் அமலாக்கத் துறை சோதனை நடத்தினர். 13ஆம் தேதி காலை தொடங்கிய அச்சோதனை 14ஆம் தேதி அதிகாலை 2 மணி வரை நீடித்தது. சோதனைக்கு பின் அமைச்சர் செந்தில்பாலாஜியை அமலாக்கத்துறை கைது செய்தது.*

*கைது நடவடிக்கையின் போது அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு நெஞ்சுவலி ஏற்பட அவர் ஓமந்தூரார் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பரிசோதனையில் அவருக்கு இருதய ரத்தக்குழாயில் 3 இடங்களில் அடைப்பு கண்டறியப்பட்டது.*

*இதனிடையே, செந்தில் பாலாஜியை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும், 15 நாட்கள் விசாரணை காவலில் எடுத்து விசாரிக்கவும் அமலாக்கத்துறை அதிகாரிகள் முயற்சி மேற்கொண்டனர். அதைத் தொடர்ந்து 28ஆம் தேதி வரை நீதிமன்ற காவலுக்கு உத்தரவிட்ட சென்னை முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி, செந்தில் பாலாஜியை 8 நாட்கள் நீதிமன்ற காவலுக்கு அனுமதித்து உத்தரவிட்டார்.*

*ஆனால் உயர்நீதிமன்ற உத்தரவின்படி அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு தனியார் மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சைக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதால் அவரை அமலாக்கத்துறையினரால் விசாரிக்க முடியவில்லை.*

*அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு இருதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு, மருத்துவ கண்காணிப்பில் இருக்கிறார். இந்த சூழ்நிலையில் செந்தில்பாலாஜியின் நீதிமன்ற காவலை வரும் 12ஆம் தேதி வரை நீட்டித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் நேற்று முன்தினம் இரவு அமைச்சர் செந்தில் பாலாஜியை அமைச்சரவையில் இருந்து நீக்குவதாக கவர்னர் ஆர்.என்.ரவி உத்தரவிட்டிருந்தார்.*

*மாநில அரசு மற்றும் முதல்அமைச்சரின் பரிந்துரையின்றி அமைச்சர் செந்தில்பாலாஜியை அமைச்சரவையில் இருந்து நீக்கி கவர்னர் ஆர்.என்.ரவி வெளியிட்ட இந்த உத்தரவுக்கு பெரும் எதிர்ப்பு கிளம்பியது. செந்தில்பாலாஜியை அமைச்சர் பதவியில் இருந்து நீக்க கவர்னருக்கு அதிகாரம் இல்லை. இந்த விவகாரத்தை சட்டப்பூர்வமாக சந்திப்போம் என்று முதல் அமைச்சர் முக ஸ்டாலின் தெரிவித்திருந்தார்.*

*இந்த பரபரப்பான சூழ்நிலையில் செந்தில் பாலாஜியை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கிய உத்தரவை கவர்னர் ஆர்.என்.ரவி நிறுத்தி வைத்துள்ளார்.*

*கடும் எதிர்ப்பு எழுந்த நிலையில் செந்தில் பாலாஜியை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கிய உத்தரவு தொடர்பாக மத்திய அரசின் தலைமை வழக்கறிஞரிடமிருந்து உரிய சட்ட நடைமுறைகளை கேட்ட பின் முடிவு எடுக்கும்படி கவர்னர் ஆர்.என். ரவிக்கு ஒன்றிய உள்துறை அமைச்சகம் அறிவுரை வழங்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.*


*இதனைத் தொடர்ந்து செந்தில் பாலாஜியை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கி பிறப்பித்த உத்தரவு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு ஆளுநர் ஆர். என்.ரவி கடிதம் அனுப்பியுள்ளார்.*

---

## தமிழினத் தலைவர்

# கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பிதழ்!

## ஜூலை 3 - அன்று வெளிவருகிறது!



**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினையொட்டி, ஒவ்வொரு மாதமும் 3 ஆம் தேதியன்று "முரசொலி சிறப்பிதழ்" வெளிவரும் என்று முன்பே அறிவிக்கப் பட்டுள்ளது.**

**அறிவிப்பிற்கு ஏற்ப, ஜூலை 3 அன்றும் முரசொலி சிறப்பிதழ், கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் எழுதியுள்ள கட்டுரைகளைத் தாங்கி, முரசொலியின் இணைப்பாக, வெளிவருகிறது.**

**— ஆசிரியர்.**